[2015 ஏப்ரல் 1

109—

கூட்டுறவு வேளாண்மைக் கிடங்கு

***38060—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, ஆவுடையானூர் ஊராட்சியில் கூட்டுறவு வேளாண்மைக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதியிலுள்ள ஆவுடையானூர் ஊராட்சியானது, நாகல்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்குட்பட்ட ஒரு பகுதியாகும். நாகல்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு ஏற்கெனவே பெத்தநாடார்பட்டி ஊராட்சிக்குட்பட்ட அருணாப்பேரி கிராமத்தில் 150 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு உள்ளது. மேலும், கிராமப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 2012-2013 ஆம் ஆண்டில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மற்றொரு கிடங்கும் கட்டப்பட்டுள்ளது. எனவே, இச்சங்கத்தின்மூலம் இப்பகுதி விவசாயிகளின் பயன்பாட்டிற்கு ஏற்கெனவே இரண்டு கிடங்குகள் உள்ள நிலையில், ஆவுடையானூர் ஊராட்சியில் புதிய கிடங்கு கட்ட சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

2015 ஏப்ரல் 1]

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமத்துவ மக்கள் கட்சியினுடைய தலைவர் அவர்கள் சார்பாகவும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக விவசாயிகளின் நலன் காத்திட மாண்புமிகு மக்களின் முதல்வர் அவர்களின் அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்திவரும் வேளையில், தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், சுந்தரபாண்டிபுரத்தில் இயங்கிவந்த கூட்டுறவு வேளாண்மை வங்கி கடந்த 2002-ல் கலைக்கப்பட்டது. சுந்தரபாண்டிபுரம் ஒரு சிறந்த வேளாண்மைப் பகுதியாகும். இதன் அருகில் திருச்சிற்றம்பலம், பட்டாகுறிச்சி ஆகிய கிராமங்கள் உள்ளன. இப்பகுதியில் நஞ்சை நிலங்கள் 2,500 ஏக்கருக்கு மேலாகவும், புஞ்சை நிலங்கள் 2,000 ஏக்கருக்கு மேலாகவும் உள்ளன. இப்பகுதி சிற்றாறு பாசனத்தில் முதல் கால்வாய் வசதியைப் பெற்றுள்ளது. சுந்தரபாண்டிபுரத்தில் இயங்கி வந்த விவசாயக் கூட்டுறவு வங்கி கலைக்கப்பட்டதால், விவசாயக் கடன்கள், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்ற வேளாண்மை இடுபொருட்களை விவசாயிகள் பெறுவதற்கு 15 கிலோ மீட்டர் தொலைவு சென்று மேலகரம் கூட்டுறவு வங்கியை அணுக வேண்டியுள்ளது. எனவே, சுந்தரபாண்டிபுரத்தில் மீண்டும் இவ்வங்கியைத் துவங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் திரு. ரா. சரத்குமார் அவர்களின் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிடங்குக் கட்டுவது குறித்துத்தான் கேள்வி கேட்டிருந்தார். இருந்தாலும் துணைக் கேள்வியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தொடங்க வேண்டுமென்று ஒரு புதிய கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்வதற்காகச் சொல்கிறேன். கூட்டுறவுத் துறையின் சட்ட திட்டங்களில் பின்வரும் நிபந்தனைகள் கூறப்படுகின்றன: ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் ஆரம்பிக்க

அதன் விவகார எல்லைக்குள் குறைந்தபட்சம் 2,000 ஹெக்டேர் நிலம் அதாவது 4,850 ஏக்கர் பயிரிடும் நிலப்பரப்பு இருக்கவேண்டும். அதில் மொத்த உறுப்பினர்கள் 60 விழுக்காடு பயிர்க் கடன் மட்டுமல்லாமல், பல்வேறு கடன்களையும் வாங்கக்கூடியவர்களாக இருக்கவேண்டும். குறைந்தபட்சம் ஓர் ஆண்டிற்கு 2 கோடி அளவிற்கு அனைத்து வகையான கடன்கள் வழங்கக்கூடிய அளவிற்கு அந்தச் சங்கம் வணிகம் செய்யவேண்டும். அந்த அளவிற்கு வணிகம் செய்தால்தான், ஐந்து இலட்சம் ரூபாய் வட்டி வருவாய் கிடைக்கும். ஐந்து இலட்சம் ரூபாய் வட்டி வருவாய் இருந்தால்தான் அதன் நிருவாகச் செலவிற்கு ஏற்றதாக இருக்கும். இதுபோன்ற மேற்கூறிய நிபந்தனைகள் இருக்கும்பட்சத்தில், அங்கு புதியதாகக் கூட்டுறவுக் கடன் சங்கம் தொடங்குவதற்கு துறைரீதியாக ஆய்வு செய்யப்படும்.

முற்பகல் 10-35

மேலும், வைத்தியநாதன் கமிட்டி, "தற்போது இயங்கி வருகின்ற சங்கங்களுடன் இணைத்துதான் செயல்பட வேண்டும் என்றும், புதிது, புதிதாகக் கூட்டுறவுச் சங்கங்களைத் திறந்தால், அதன் அருகில் அமைந்துள்ள கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயலிழக்கும் நிலை ஏற்பட்டுவிடும்" என்றும் சொல்லியிருக்கிறது. எனவே, அதுபோன்ற பாதிப்பு இல்லாத சூழ்நிலையில், அந்தப் பகுதி மக்களுக்குத் தேவை இருக்கும்பட்சத்தில், மேற்கூறிய கூட்டுறவுச் சட்ட விதிகளுக்குட்பட்டு அமையும்பட்சத்தில், அங்கு புதிதாகக் கூட்டுறவுக் கடன் சங்கம் தொடங்குவதற்கு, துறை சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

110—

குடமுழுக்கு

***39089—திரு. எம்.கே. செல்வராஜு:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—